RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s819

# வாகனங்களும் பெண்ணின் வாழ்வியல் மாற்றங்களும்: அம்பையின் சிறுகதைவழி

**ம. மகாலட்சுமி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, இராஜா நந்திவர்மன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தெள்ளார்-604406, தமிழ்நாடு, இந்தியா

# Vehicles and Women's Life Changes: Ambai's Short Story

**M. Mahalakshmi** [a, *]

[a] Department of Tamil, King Nandhivarman College of Arts and Science, Thellar–604406, Tamil Nadu, India

* Corresponding Author: drmmahalakshmi16@gmail.com

Received: 06-05-2021
Revised: 19-04-2022
Accepted: 26-04-2022
Published: 20-07-2022

Check for updates

**ABSTRACT**

Tamil Short Stories considered to be one of the contemporary Literary forms. From the very beginning of short story till it has reduced to a size of a paragraph it has undergone various changes in structure, pattern and contextualization. Similarly, the short story "Vaganam" written by Ambai in the year 1971 expresses the stress and pressure of the women and making the same a driving force to achieve success. This research paper critically analysis the struggle, challenges success and changes faced by the women folk which is quite obvious in the recent scenario with reference to Ambai's short story "Vaganam" The usage of advance technologies to drive this computer is less polluting to the environment and less harmful to humans than the various vehicles such as cars. Arrow can be seen to be disciplining women as there are numerous different uses of the computer and it is safe for women to travel this way.

**Keywords:** Vehicle, Computer, Accident, Short story, Feminism, Ambai

## முன்னுரை

தமிழின் இலக்கிய வகைமைகளுள் எளிமையானதும் பரவலானதும் எல்லோராலும் விரும்பப்படுவதுமான இலக்கிய வகைமை இக்கால இலக்கியம் ஆகும். இக்கால இலக்கியத்தின் உள் வகைமைகளுள் ஒன்று சிறுகதை. சிறுகதை இலக்கியம் தோற்றம் பெற்றது முதல் இன்றுவரை பல அசுர வளர்ச்சி கண்டு வளர்ந்து வருகிறது. எண்ணற்ற கதைத் தொகுப்புகளும் கதாசிரியர்களும் சிறுகதை இலக்கிய வரலாற்றில் தடம் பதித்துக் கொண்டு இருக்கின்றனர் (Aasiriyar Kulu, 2017). இதனால் சிறுகதை குறித்த ஆய்வுகளும் பலநிலைகளில் அமைந்துள்ளன. சான்றாக ஆசிரியர் குறித்த ஆய்வுகள், சிறுகதையின் வரலாறு குறித்த ஆய்வுகள், சிறுகதைப் பொருண்மைகள் குறித்த ஆய்வுகள், சிறுகதையில் வரும் கதாமாந்தர்கள் குறித்த ஆய்வுகள், ஒரே ஆசிரியர் எழுதிய கதைகளை ஆராய்வது, ஒரே பொருண்மையில் அமைந்த கதைகளை எழுதிய ஆசிரியர்களைப் பற்றி ஆராய்வது, சிறுகதைக்கான உத்திகள் குறித்த ஆய்வுகள் என்று பல்கிப் பெருகியுள்ளன.

தமிழ்ச் சிறுகதைகள் குறித்த இத்தகைய ஆய்வுநிலையில் தற்காலத் தமிழ் இலக்கியத்தின் முதல், பெண்ணிய எழுத்தாளர் அம்பையின் ‘வாகனம்’ எனும் சிறுகதை 1997இல் எழுதப்பட்டதாகும். இக்கதை பெண்ணின் ஏக்கங்களுள் ஒன்றை வெளிப்படுத்துவதும் தற்போது அந்த ஏக்கமே அவளின்

சாதனைகளாகத் தொடர்வதுமாய் அமைவது எங்ஙனம் என்பதையும் ஆராய்ந்து விளக்கும் முகமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

அம்பையின் கதைகள் பொதுவாக எந்தெந்தக் கருப்பொருளை மையமிட்டு அமைந்துள்ளன என்பதையும் குறிப்பாக வாகனம் என்னும் சிறுகதையின் கருப்பொருளை உரைக்கும்போதும், வாகனங்கள் குறித்தும் அவை பயன்படுத்தப்படும் விதம் குறித்தும் விளக்கும்போது விளக்கவியல் அணுகுமுறையும், வாகனங்களுள் கணினி வாகனம் எவ்வாறு பிற வாகனங்களிலிருந்து வேறுபடுகின்றது எனக் கூறும்போது ஒப்பீட்டாய்வு அணுகுமுறையும் பின்பற்றப்படுகின்றது.

## அம்பை சிறுகதைகளும் 'கரு'க்களும்

1960களின் பிற்பகுதியில் எழுதத் தொடங்கிய இலக்குமி என்ற இயற்பெயர் கொண்ட அம்பை சிறுகதை மட்டுமன்றிக் கவிதை, புதினம், குறுநாவல்கள் எனும் வகைமைகளிலும் தடம் பதித்தவராக உள்ளார். இவருடைய படைப்புகள் பொதுவாகக் காதல், திருமணம், உறவு, அரசியல், இசை எனப் பல பொருண்மைகளைக் கொண்டிருக்கும். "அவர்களின் மொழியைப் புரிந்துகொள்வது கடினம் என்று பலரும் கூறுவது உண்டு" என்று அம்பையின் மொழிநடை குறித்து கே. எஸ். கோலப்பதாஸ் தம் ஆய்வில் பதிவு செய்கின்றார் (Ambai, 2017). குறிப்பாகப் பெண்களின் பிரச்சனைகளை வெளிப்படுத்தும வகையில் பெண்களின் உறவுச் சிக்கல்கள், குழப்பங்கள், கோபதாபங்கள், சமரசங்கள் ஆகியவை மேலோங்கி இருப்பதை அவருடைய படைப்புகளை வாசிப்பதன்வழியாக உணர்ந்து கொள்ள முடியும். குறிப்பாக 'சிறகுகள் முறியும்', 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை', 'காட்டில் ஒரு மான்' முதலான பல கதைகளைக் கூறலாம். "அம்பையின் சிறுகதைகளைப் பெண் கோபத்தின் முதல் வெளிப்பாடு என்று சொல்லலாம். வாழ்வின் மீது கவியும் துன்பங்களையும் தன் முது கவியக் கூடியவையாகக் கண்டு வருத்தம் கொள்ளும் பெண்மையின் உலகம்" என்பார் சுந்தரராமசாமி (Ambai, 2017).

பெண் என்பவள் தன் உணர்வுகளையெல்லாம் ஒடுக்கி வாழ வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுவதை எதிர்த்தும் பெண் என்பவளும் ஓர் உயிரியே. அவளுக்கும் சுய மரியாதையும் விருப்பு வெறுப்புகளும் உண்டு எனும் கருத்தையும் முன்வைப்பதாக அம்பையின் படைப்புகள் விளங்குவதைக் காணலாம் (Vasuki, 2014).

## 'வாகனம்' கதைச்சுருக்கம்

சமுதாயம் எல்லா நிலைகளிலும் ஆணையும் பெண்ணையும் வேறுபடுத்திக் காண்கிறது. பண்பாட்டுத் தளத்தில், தொழில் தளத்தில், பொருளாதார நோக்கில் என பல்வேறு நிலைகளில பாலின வேறுபாடு காணப்படுகின்றது. இத்தகைய பாலின வேறுபாட்டை தமிழ்ச் சிறுகதைகள் பல வடிவங்களில் சித்தரிக்கின்றன. அப்படியான பாலின வேறுபாட்டைப் பிரதிபலிக்கும் கதையாக அம்பையின் வாகனம் சிறுகதை அமைகின்றது.

எல்லோருக்கும் அவரவர் தேவைக்கேற்ப ஒரு வாகனம் இருக்கிறது எனத் தொடங்கி ஆண் கடவுள்ர்களாகிய சிவனுக்கு நந்தி, முருகனுக்கு மயில், திருமாலுக்குக் கருடன், சனீஸ்வரனுக்குக் காகம், யமனுக்கு எருமை, வினாயகருக்கு மூஞ்சூறு வாகனங்களும் கடவுளரின் தேவிகளாகிய பாகேச்வரிக்கு அன்னம், பத்மாசனிக்கு நாகம், மகேச்வரிக்கு ரிசபம் மீனாட்சிக்குக் குதிரை மற்றும் சிங்கம், வெண்தாமரை, சிவப்புத் தாமரைகளும் பயணம் செய்ய உள்ளன.

இவை மட்டுமன்றி நம் தமிழ் இலக்கியக் காவிய நாயகிகள் கூடப் புஸ்பக விமானத்தில் பறந்திருக்கிறார்கள். ஆங்கிலப் புனைகதைகளில் சூனியக்காரிகள்கூடத் துடைப்பக்கட்டையில் பறந்து வருவார்கள். ஆனால் அரசிளங்குமரிகள் மற்றும் ராணிகள் எத்தனை பேர் யானையேற்றம், குதிரையேற்றம் செய்யவில்லை? தேரோட்டியவர்கள்கூட உண்டு என்று இவற்றையெல்லாம் கூறி பாக்கியத்திற்கு மட்டும் வாகனயோகம் இருக்கவில்லை என்று கதையை நகர்த்துகிறார் அம்பை.

## கதைவழி வெளிப்படும் பெண்ணின் சிக்கல்கள்

பாக்கியம் தனக்கென்று ஒரு வாகனம் இல்லையே என்று ஆதங்கப்படுகிறாள். பத்து மாதத்திலேயே அவள் நடக்க ஆரம்பித்து விட்டதால் நடைவண்டிகூட அவளுக்குத் தரப்படவில்லை. சிறு வயதிலேயே மரப்பாச்சி பொம்மையைக் கொடுத்துப் பழக்குபவர்களாக வீட்டில் உள்ள ஆண்கள் இருக்கின்றனர் என்றும் பெண் என்பவள் தனித்தே நிற்கப்படுவதில்லை. அவள் கதவின் பின்னோ அல்லது தூணைப் பிடித்தோ, நாற்காலியின் கையைப் பிடித்தோதான் நிற்க வேண்டி உள்ளது. “எதையாவது பிடித்துக் கொள்ளாமல் பெண் பிறவிகள் நிற்க முடியாது” என்று அம்பை ஆதங்கப்படுவதை இக்கதையில் பார்க்க முடிகிறது (Ambai, 2017).

ஆண்களுக்குச் சக்கரம் உள்ள வாகனங்கள் சிறுவயது முதலே உண்டு. ஆண் குழந்தைகளுக்கு மூன்று சக்கர சைக்கிள், சித்தப்பாவின் மோட்டார் பைக், தாத்தாவின் கறுப்பு ப்யூக் கார், மாமாக்கள் கல்லூரி போக ராலே சைக்கிள், தோழர் மணிவண்ணனின் ஸ்கூட்டர் எனத் தன்னைச் சார்ந்த அனைத்து ஆண்களும் ஏதேனும் ஒரு வாகனம் வைத்திருப்பதை பாக்கியம் உணர்கிறாள். “மூன்று சக்கர சைக்கிளிலிருந்து ப்யூக் கார் வைர ஓர் அதிகார பூர்வமான வாகன முன்னேற்றம் கண்கூடாகத் தெரிந்தது ஆண்களைப் பொறுத்தவரை” என்று ஆண்கள் வாகனத்தின் மூலமாகப் பெண்களிடம் ஆதிக்கம் செலுத்துவதைப் பதிவு செய்கிறார் அம்பை. பெண் சார்ந்துள்ள தந்தை, தோழமை பற்றிய கணிப்புகளையும் இக்கதையில் சந்தர்ப்பம் வாய்க்கும்போது வெளிப்படுத்தி விடுகிறார் (Ambai, 2017).

பெண்கள் சைக்கிள் ஓட்டக் கூடக் கட்டுப்பாடுகள் வீட்டில் உண்டு. பெண்களின் கையோ காலோ முறிந்து போனால் அவளைத் திருமணம் செய்ய யாரும் வர மாட்டார்கள் என்ற வீட்டிலுள்ளவர்களின் காரணமே வாகனம் ஓட்டுவதற்குரிய காரணங்களுள் பிரதானமாக இருக்கிறது. பாக்கியம் குதிரைச் சவாரி செய்ய ஆசைப்பட்டு அது விபரீத ஆசையாகப் பெற்றோர்களால் நிராகரிக்கப்படுகின்றது. “சமூகம் இடந்தராது என்றால் இடந்தரும் சமூகத்துக்கு அவளை அனுப்பு” என்று தீரமாகச் சொன்னவர் திருவிக என்று ஹேமா சுட்டிக் கூறுகிறார் (Hema, 2009; Balasubramanian, 2002; Ithayaventhan, 2008). குதிரையும் விலக்கப்பட்ட வாகனமாக ஆனதை எண்ணி வருந்துகின்றாள் பாக்கியம். பிறகுதான் தனக்கான தீர்வை நோக்கி நகர்கிறாள் பாக்கியம்.

## சிக்கலுக்கான தீர்வு கூறுதல்

சிறு வயது முதலே வாகனம் ஏதுமில்லை என ஆதங்கப்பட்ட பாக்கியம் பின்னாளில் மின்ரயிலிலும் இரண்டடுக்குப் பேருந்திலும் பயணம் செய்து அலுவலகம் அடைவதை வழக்கமாக்கிக் கொள்கிறாள். அதோடு பாக்கியம் பயணிக்கும்போது வழியில் செல்லும் வாகனங்களால் எத்தனை இடர்களும் விபத்துகளும் ஏற்படுகின்றன என்பதையும் பதிவு செய்யும் அம்பை கடைசியில் கணினியைத் தன் வாகனமாக மாற்றிக் கொண்டாள் பாக்கியம் என்று கதையை முடிக்கிறார். ஆட்டோ, கார், மோட்டார் பைக், ஸ்கூட்டர் முதலான வாகனங்கள் எழுப்பும் ஒலி மாசுகள், பயணத்தின் போது கேட்கும் வாகனம் சார்ந்த வசவுச் சொற்கள் ஆகியவற்றைக் காட்டிலும் கணினி சிறந்த வாகனமாக அமைவதை எண்ணிப் பெருமை கொள்கிறாள் பாக்கியம்.

“திட்டமே போடாமல் ஒரு வாகனம் அவளுடையதாயிற்று. சக்கரமில்லா, சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத வாகனம். ஓசையின்றி, மோதலின்றி, ரத்தமின்றி இயங்கும் வாகனம். மின்னியக்க வாகனம். மூஞ்சூறு வாகனம். ஆரோகணித்துத் தகவல் வீதியில் பல காத தூரம் பயணம் போனாள்... தற்போது தன் வாகனம் என்று குறிப்பிட்டு, மின்னியக்க மூஞ்சூறின் மேல ஆரோகணித்தவளாய்த் தன்னை வரைந்து கொண்டாள்” என்று அம்பை பாக்கியத்துக்குக் கணினி வாகனம் கொடுத்துத் தீர்வுடன் சிறுகதையை நிறைவு செய்கின்றார் (Ambai, 2017).

## வாகனங்களும் விபத்துகளும் சட்ட ஒழுங்கும்

அம்பையின் வாகனம் சிறுகதைப்படி அவர் கூறும் வாகனங்களின் பயன்பாடு தமிழ்நாட்டில் அதிகம். ஓசை, மோதல், ரத்தம் என்று இவற்றால் பாதிப்புகளும் அதிகம். இந்தியாவிலேயே சாலை

விபத்து அதிகம் ஏற்படும் மாநிலமாகத் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது மட்டுமன்றிக் கொள்ளை நோயால் இறப்பவர்களைவிடச் சாலை விபத்துகளில் பலியாவோரே அதிகமாக உள்ளனர். தேசிய கமிட்டியிடம் சான்றிதழ் பெற்ற பின்பே வாகனங்கள் விற்பனைக்கு அனுமதிக்கப்படும். பதிவு செய்யாமல் வாகனத்தை ஓட்டுவதும் சாலை விதிகளை மீறி வாகனம் ஓட்டுவதும் குற்றம் என்று மோட்டார் வாகனச் சட்டங்கள் கூறுகின்றன.

வாகனங்களில் உள்ள ஒலிப்பான் சத்தம்கூட தேசிய கமிட்டி அனுமதிக்கும் டெசிபல் அளவிலேயே இருக்க வேண்டியுள்ளது. மேலும் அலைபேசியில் பேசிக்கொண்டே வாகனம் ஓட்டினாலும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டினாலும் 4000ரூபாய் அபராதம் முதல் ஓட்டுநர் உரிமம் ரத்தாகும் நிலையும் ஏற்படும். தலைக்கவசம் இன்றி வாகனம் ஓட்டுவதும் தண்டனைக்குரிய குற்றமாக உள்ளது.

ஆண்டுதோறும் சனவரி முதல் வாரம் சாலை பாதுகாப்பு வாரம் என அரசால் கடைபிடிக்கப்பட்டுப் பல்வேறு விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்படுத்தப்படுகிறது. எமன் மற்றும் சித்திரகுப்தன் வேடமிட்ட நபர்களின் விழிப்புணர்வு நாடகம், 'சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு', 'விபத்தினால் வருவது துன்பம் பாதுகாப்பினால் வருவது இன்பம்' முதலான வாசகங்கள் தாங்கிய பேரணிகளும் பள்ளி மற்றும் கல்லூரி அளவில் மாணவர்களிடையே போட்டிகளும் நடத்தி அரசு மக்களுக்கு வாகனங்களைப் பயன்படுத்தும் முறைகளை நெறிப்படுத்தி வருகின்றது. இவ்வாறு வாகனங்களினால் மோதல்கள், விபத்துகள், ஒலி மாசு, சுற்றுச்சூழல் மாசு, உயிரிழப்புகள் அதிகம் ஏற்படுவதைக் காண முடிகிறது.

## வாகனங்களும் பெண்களின் சாதனைகளும்

அம்பையின் சிறுகதைவழிக் காணும்போது குடும்பத்தில் எச்சரிக்கப்படும் வாகன விபத்துகளால் பெண்களுக்குத் திருமணம் நடக்காமல் போய்விடும் என்ற ஆபத்தைத் தாண்டிப் பெண்கள் பலர் இன்று வாகனங்களை இயக்குவதில் சாதனை படைத்துவருவதைக் காண முடிகின்றது. "ஆண் விமானம் ஓட்டலாமா, வெல்டிங் செய்யலாமா என்று யாரும் கேட்பதில்லை. ஆனால், பெண் இதையெல்லாம் செய்யலாமா என்று இன்னமும் விவாதங்கள் நடக்கின்றன" என்று ஆதங்கப்படுகிறார் பெண்ணிய ஆய்வாளர் உ. வாசுகி. தமிழக அளவிலும் இந்திய அளவிலும் மகிழுந்து, பேருந்து, மூவுருளி, தொடர் வண்டி, போர் விமானம், திரிவூர்தி, வானூர்தி முதலானவற்றை இயக்கிப் பெண்கள் சாதனை படைத்துவருவதைக் காண முடிகின்றது. குறிப்பாக 2000க்குப் பிறகு இச்சாதனைகள் அதிகரித்துள்ளதைக் காண முடிகின்றது.

இந்தியாவில் முதல் பெண் விமானியாக 1936இல் சரளா தாக்ரலும், இந்தியாவின் முதல் பெண் மாலுமியாக ரேஸ்மா நிலோஃபரும் (2018), முதல் பெண் போர் விமானியாக அவனி சதுர்வேதியும் (2018), பெண்கள் மட்டுமே இயக்கும் முதல் ரயில்நிலையமாக ஜெய்ப்பூர் காந்திநகர் ரயில் நிலையமும் (2019), முதல் பெண் ஆம்புலன்ஸ் ஓட்டுநராக தமிழகத்தைச் சேர்ந்த எம். வீரலட்சுமியும் (2020) எனப் பெண்கள் பலர் வாகனங்களை ஓட்டுவதில் சாதனை படைத்துள்ளனர்.

பெண்கள் அதிகமாகப் பயன்படுத்தும் வாகனமாகத் தற்போது இருப்பன துள்ளுந்துகளே ஆகும். கல்லூரி மற்றும் அலுவலகம் செல்வதற்காகப் படித்த பெண்களாலும், சுயதொழில் செய்யும்வண்ணம் சரக்கு, பால் எனப் பல பொருளகளைக் கொண்டுசெல்லப் படிக்காத பெண்களாலும் என அனைத்து பெண்களும் பயன்படுத்தும் வாகனமாகத் துள்ளுந்துகள் அமைகின்றன. இவ்வாகனங்களை இயக்கும்போது ஆண்களைக் காட்டிலும் பெண்கள் சாலை விதிமுறைகளை முழுமையாகக் கடைபிடிப்பவர்களாக உள்ளனர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது (Rukmani, 2010).

அம்பையின் சிறுகதையில் மிதிவண்டி ஓட்டக் கூட உரிமையற்ற பாக்கியம் போன்ற பெண்கள் இருந்த காலகட்டம் தற்போது பெருமளவு மாறியுள்ளது. தமிழக அரசால் மிதிவண்டி பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட பின்பு உளவியல் ரீதியாகப் பெண்கள் தனித்த செயல்பாட்டினால் ஒரு சுதந்திரத்தை உணர முடிகிறது. இதனால் தன்னம்பிக்கை அதிகமாகிப் பல

சாதனைகள் செய்ய அடிப்படைத் தூண்டுகோலாகப் பெண்ணுக்கு மிதிவண்டி வாகனம் அமைவதைக் காண முடிகின்றது.

## மூஞ்சூறு வாகனமும் வாழ்வியல் மாற்றங்களும்

1997இல் எழுதப்பட்ட அம்பையின் வாகனம் சிறுகதையில் கதை முடிவில் பாக்கியம் தேர்ந்தெடுக்கும் மூஞ்சூறு வாகனம் மேற்சொன்ன எந்த ஆபத்தையும் விபத்தையும் மாசுவையும் உருவாக்காது இருப்பது அந்த வாகனத்தின் பயன்பாட்டைப் பரவலாக்கியது. பாக்கியம் போலப் பெண்கள் பலருக்குத் தற்போது கணினி வாகனமே கைகொடுத்து உதவும் கண்ணியமான வாகனமாக உள்ளது. தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் பெண்கள் இந்தக் கணினி வாகனம் மூலமே பொருளாதாரத்தை உயர்த்திச் சுயமதிப்பையும் தன்மானத்தையும் காத்துக் கொள்பவர்களாக உள்ளனர்.

தற்போதைய கொரோனா என்னும் தீநுண்மி பெருந்தொற்றுக் காலத்தில் அனைத்து துறைகளும் மூஞ்சூறு வாகனம் எனக் குறிக்கப்படும் கணினி வாகனத்தின் வழியே செயல்படுவதைக் காணலாம். குறிப்பாக ஆன்லைன் என்று சொல்லப்படும் இணையவழி மூலம் கல்வி, மருத்துவம், வணிகம், ஊடகம் என அனைத்து துறைகளும் செவ்வனே இயங்க கணினி உதவுகிறது. கணினி வந்த பிறகு தட்டச்சுத் தொழில் பரவலானது. தட்டச்சுத் தொழிலில் ஆண்களைக் காட்டிலும் பெண்களே மிகுந்த பலனை அடைபவர்களாக உள்ளனர். பல்வேறு முன்பதிவுகள், கலந்துரையாடல்கள் என அத்தனை செயல்பாடுகளிலும் கணினி வாகனமே அனைவராலும் பயன்படுத்தப்படுகிறது.

“பெண்களால் முடியாது என்று கூறிவந்த துறைகளில் எல்லாம் இன்று பெண்களின் இருப்பு அதிகரித்துளளது. தங்களின் திறமையை, தகுதியை வளர்த்துக் கொள்வதில் முழுமையாக ஈடுபட்டுள்ளனர். உரிமையைக் கேட்டுப் பெறுதலை விடுத்து தானே எடுத்துக்கொள்ளத் துவங்கியுள்ளனர்.

சமூக நோக்கில் பெண்ணின் நிலை ஒவ்வொரு காலகட்டத்திலும் கடுமையானதாகவும், கொடுமைகள் நிறைந்ததாகவும் உள்ளது” என்ற பதிவு இங்கு கவனத்திற்குரியது. அந்த வகையில் கணினி துறையைப் பெண்கள் ஆக்கிரமித்து உள்ளனர். கணினி ஓர் அறிவுக்களஞ்சியமாகவும், மின்னஞ்சல்வழி கடிதப் போக்குவரத்து வாகனமாகவும், மின்னிதழ் கொண்டு வரும் செய்தியாளராகவும், மின் வணிகம் செய்யும் உற்பத்தியாளராகவும் எனப் புதுப்புது வளர்ச்சிகளைச் சுமந்து ஆண், பெண் என்ற பாகுபாடு இன்றிச் செயல்படுகிறது (Rajalakshmi, 2012). ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் கணினித் துறையில் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருவதையும் காண முடிகின்றது.

## முடிவுரை

தொடக்கத்தில் வீட்டை விட்டே பெண்கள் வெளியே செல்ல இயலாத சூழல் மாறித் தற்போது கணினிவழி உலகை உலாவிப் பார்க்கும் வளர்ச்சி நோக்கிப் பெண்கள் நடைபோடுவதை அம்பை சிறுகதையின்வழி உணர முடிகிறது. எழுத்தைத் தன் போராட்டக் கருவியாகக் கையில் எடுத்த பெண் ஆளுமைகள் வரிசையில் முதலிடம் பிடிப்பவராக அம்பை இருந்துள்ளதை சிறுகதையின் வரலாற்றின்வழி அறியலாம். வாகனம் சிறுகதையில் கூறப்படும் கடவுளர், காவிய வாகனங்களைப் போலப் பூமியில் வாழும் பெண்ணுக்கும் ஒரு வாகனம் தேவை எனக் கதையை அமைத்துச் செல்லும் பாங்கிலிருந்து அம்பையின் ஆணுக்கு இணையாகப் பெண்ணுக்கும் அனைத்து உரிமைகளும் கிடைக்க வேண்டும் என்ற சமத்துவப் பார்வை தென்படுகிறது. பாக்கியம் கதாபாத்திரத்தின் வழியும் மூஞ்சூறு வாகனம் வழியும் பெண் என்பவள் தனக்கான சிக்கலிலிருந்து அவளே வெளிவரத் தீர்வு காண விழைய வேண்டும் என விரும்பும் அம்பையின் உளப்பாங்கை உணர முடிகிறது. மகிழுந்து, பேருந்து முதலான பல்வேறு வாகனங்களைக் காட்டிலும் கணினி எனும் வாகனம் சுற்றுச்சூழலுக்குப் பெருத்த மாசினையும், மனிதர்களுக்குப் பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை என்ற உண்மை புலனாகின்றது. கணினிவழிப் பல்வேறு எண்ணற்ற பயன்கள் இருப்பதையும் பெண்கள் இதன்வழிப் பயணம் மேற்கொள்ளப் பாதுகாப்பானது என்றும் அம்பை பெண்களை நெறிப்படுத்துவதைக் காண முடிகின்றது.

தினைப்புனம் காக்கவும், இல்லறம் பேணவும் என இருந்த பெண்கள் மரப்பாச்சி பொம்மையோடு விளையாடத் திணிக்கப்பட்ட பெண்கள் ஆண்களின் அரவணைப்பு எனும் அடக்குமுறைப் பெட்டகத்தில் இருந்த பெண்கள் வாகனத்தின் பின்னாலேயே அமர்ந்து பழக்கப்பட்ட பெண்கள் இப்போது தம் வாழ்வியலில் பல்வேறு மாற்றங்களை நோக்கி விரைந்து முன்னேறி வருவதை இவ்வாய்வுக்கட்டுரை வழி அறியலாம். குறிப்பாக மாற்றுத் திறனாளிப் பெண்கள் மற்றும் திருநங்கைகளுக்குத் தக்க வாழ்வியல் ஆதாரம் தருவதாக கணினி அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அம்பையின் பிற படைப்புகளில் பெண் குறித்த பார்வை எவ்வாறு அமைந்துள்ளது என ஆராயவும், அம்பையின் வாகனம் எனும் ஒற்றைச் சிறுகதைவழி பெண்ணின் சிக்கல்கள், அதற்கான தீர்வுகள், முன்னேற்றங்கள், சாதனைகள் ஆராயப்பட்டதுபோல் பெண் எழுத்தாளர் பிறரின் படைப்புகளில் இவ்வாறான பார்வையில் ஆராய முற்படவும், ஆண் எழுத்தாளர்களின் படைப்புகளில் பெண்ணின் சிக்கல்கள் எங்ஙனம் கூறப்பட்டுள்ளன என ஆராயவும் வாய்ப்பளிப்பதாக இக்கட்டுரை மேலாய்வுக் களங்களை இட்டுச் செல்கின்றது.

## References


Aasiriyar Kulu, (2017) Sirukathai Thoguppu, Rishi Pathippagam, Coimbatore, India.

Ambai, (2017) Amba Sirukadhaikal, Kalachuvadu Pathippagam, Chennai, India.

Balasubramanian, S., (2002) Penn, State School Sagar Education Fund, Chennai, India.

Hema, R., (2009) Pen Ennum Mahasakthi, Paavai Pathippagam, Chennai, India.

Ithayaventhan, P., (2008) Penn Padaipulagam Endru, Iruvaachi Veeliyeedu, Chennai, India.

Rajalakshmi, A., (2012) Aakkamum Pennale, Murankalari Padaipagam, Chennai, India.

Rukmani, S., (2010) Indraiya Suzhalil Pen, Paavai Pathippagam, Chennai, India.

Vasuki, U., (2014) Penniyam Pesalam Vaanga, Bharathi Puthagaalayam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License